DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 33/2024** |
| Deposition of Witness for | : PW 1 |
| Name | : சந்தனமாரி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 08.01.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 8th January 2026.

**எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது வடக்குபுதூரில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். புகார்தாரர் உத்தண்டகாளை எனதுமகன். உத்தண்டகாளை தற்போது எங்குள்ளார் என்று எனக்கு தெரியாது. கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு எனது கணவர் இறந்தபிறகு எனது மகன் ஊரைவிட்டு போய்விட்டார். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

**அரசுதரப்பில் குறுக்குவிசாரணை**

போலீசார் விசாரணையில் 01.09.2015 ம் தேதி மாலை 7.15 மணிக்கு என் மகன் உத்தண்டகாளை எங்கள் ஊர் மெயின்ரோட்டில் புதியதமிழகம் கட்சியின் கொடிக்கம்பம் அருகில் நின்று கொண்டிருந்தபோது அங்கு வந்த ஆஜர் எதிரிகள் முன்விரோததத்தின் காரணமாக என் மகனை கெட்டவார்த்தையால் ஏசி அரிவாளால் வெட்டி காயப்படுத்தினார்கள் என்றும், பின்பு கொலை மிரட்டல்விடுத்தார்கள் என்றும், அதைப்பற்றி கேள்விப்பட்டேன் என்றும் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**